## ஹெபடைடிஸ் B என்றால் என்ன?

ஹெபடைடிஸ் B என்பது கல்லீரலைத் தாக்கும் ஒரு வைரஸ் ஆகும். சிகிச்சையளிக்கப்படாவிட்டால், இது கல்லீரல் செயலிழப்பு அல்லது புற்றுநோயை உண்டாக்கலாம்.

உலகம் முழுவதும் 296 மில்லியன் நபர்கள் ஹெபடைடிஸ் B நோய் தொற்றுடன் வாழ்வதாக மதிப்பிடப்படுகிறது. பலர் நோய்வாய்ப்பட்டவர்களாகத் தென்படவோ அல்லது உணரவோ மாட்டார்கள் என்பதால் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது அவர்களுக்கே தெரிவதில்லை.

பாதிக்கப்பட்ட ரத்தம் அல்லது சில உடல் திரவங்களின் தொடர்பு மூலம் ஒரு நபரிடம் இருந்து மற்றொருவருக்கு ஹெபடைடிஸ் B பரவும்.

## ஹெபடைடிஸ் B மற்றும் கர்ப்பம்

நீங்கள் கர்ப்பமாக இருந்தால், பேறுகாலத்திற்கு முந்தைய கண்காணிப்பின் ஒரு பகுதியாக ஹெபடைடிஸ் B க்கான ரத்தப் பரிசோதனையை நீங்கள் செய்ய வேண்டும்.

நீங்கள் பாதிக்கப்பட்டு இருந்தால், பிரசவத்தின் போது உங்கள் குழந்தைக்கு ஹெபடைடிஸ் B ஐக் கடத்த நேரிடலாம்.

நீங்கள் கர்ப்பமாக இருந்து ஹெபடைடிஸ் B ஆல் பாதிக்கப்பட்டிருந்தால், உங்கள் குழந்தைக்கு ஏற்படும் தொற்றைத் தவிர்க்க குழந்தை பிறந்த உடனே தடுப்பூசி தொகுப்புகளை செலுத்திக் கொள்ளலாம்.



## மேலும் தகவல்களுக்கு:

**Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்)**
www.cdc.gov/hepatitis/hbv/

**HepB Moms**
www.hepbmoms.org (ஆங்கிலம்)

HepBHub
doh.wa.gov/hepbhub

DOH 420-406 May 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov ற்கு மின்னஞ்சல் செய்யவும்.

ஆதாரம்: CDC, Protect Your Baby for Life



# ஹெபடைடிஸ் B:

## உங்களையும் உங்கள் குழந்தையையும் பாதுகாக்க நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டியவை

Washington State Department of Health



## என் குழந்தைக்கு ஹெபடைடிஸ் B ஆபத்தானதா?

குழந்தைகள் ஹெபடைடிஸ் B ஆல் பாதிப்படையும்பொழுது, அவர்களுக்கு ஆயுட்காலத்திற்கும் நீடிக்கும் தொற்று ஏற்பட 90% வாய்ப்பு உள்ளது.

சிகிச்சையளிக்கப்படாவிட்டால், நீடித்த ஹெபடைடிஸ் B கொண்ட 4 இல் 1 குழந்தைக்கு கல்லீரல் சேதம், கல்லீரல் நோய் அல்லது கல்லீரல் புற்றுநோய் போன்ற தீவிர பிரச்சனைகள் ஏற்படும்.

அதிர்ஷ்டவசமாக, ஒரு பாதுகாப்பான மற்றும் திறன்மிகு தடுப்பூசி மூலம் ஹெபடைடிஸ் B தொற்றைத் தவிர்க்கலாம்.

## ஹெபடைடிஸ் B ஐத் தடுத்து உங்கள் குழந்தையைப் பாதுகாத்திடுங்கள்

பிறந்த 24 மணிநேரத்திற்குள் முதல் ஹெபடைடிஸ் B தடுப்பூசியை உங்கள் குழந்தை பெறவேண்டும்.

உங்களுக்கு ஹெபடைடிஸ் B பாசிட்டிவாக இருந்தால், பிறந்த 12 நேரத்திற்குள் குழந்தைக்கு ஹெபடைடிஸ் B இம்யூன் குளோபுலின் (HBIG) தரப்பட வேண்டும்.

ஹெபடைடிஸ் B தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு உங்கள் குழந்தைக்கு 3 ஹெபடைடிஸ் B தடுப்பூசிகள் மற்றும் HBIG ஊசியும் செலுத்த வேண்டும். குழந்தைக்கு 9-12 மாதங்கள் ஆகும் பொழுது குழந்தை பாதுகாக்கப்பட்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த பரிசோதனை செய்யுங்கள்.

| செலுத்த வேண்டிய தேதி | ஹெபடைடிஸ் B உள்ள கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை பெற வேண்டிய தடுப்பூசிகள் |
|---|---|
| **பிறப்பின் போது** | ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் பிறப்பு டோஸ் மற்றும் ஹெபடைடிஸ் B இம்யூன் குளோபுலின் (HBIG) |
| **1–2 மாதத்தில்** | ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் 2 ஆம் டோஸ் |
| **6 மாதத்தில்** | ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் 3 ஆம் டோஸ் |
| **9–12 மாதத்தில்** | உங்கள் குழந்தை பாதுகாக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய சோதனை |

உங்கள் குழந்தையைப் பாதுகாக்க மேலும் பிற வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- உங்களுக்கு ஹெபடைடிஸ் B இருந்தாலும் கூட குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டலாம். உங்களுக்கு வெடித்த மற்றும் ரத்தம் கசியும் முலைக்காம்புகள் இருந்தால் மருத்துவரிடம் கலந்தாலோசிக்கவும், தாய்ப்பால் ஊட்டும் பொழுது உங்களுக்கு உதவ விருப்பத்தேர்வுகள் உள்ளன.
- உங்கள் ஹெபடைடிஸ் B தடுப்பூசி பதிவை வைத்திருந்து மருத்துவ வருகைகளின் போது கொண்டு வாருங்கள்.
- உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு ஹெபடைடிஸ் B பரிசோதனை செய்து தடுப்பூசி பெறச்செய்யுங்கள்.

## உங்களுக்கு ஹெபடைடிஸ் B இல்லையென்றால்

ஒரு பாதுகாப்பான மற்றும் திறன்மிகு தடுப்பூசி மூலம் உங்களையும் உங்கள் குழந்தையையும் பாதுகாக்க முடியும். இந்தத் தொடரை நிறைவுசெய்வதை உறுதிசெய்யுங்கள்!

| செலுத்த வேண்டிய தேதி | குழந்தை பெற வேண்டிய தடுப்பூசிகள் |
|---|---|
| **பிறப்பின் போது** | ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் பிறப்பு டோஸ் |
| **1–2 மாதத்தில்** | ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் 2 ஆம் டோஸ் |
| **6 மாதத்தில்** | ஹெபடைடிஸ் B தடுப்பூசியின் 3 ஆம் டோஸ் |

## உங்களுக்கு ஹெபடைடிஸ் B இருந்தால் கவனித்துக் கொள்ளுங்கள்

உங்கள் கல்லீரலின் ஆரோக்கியத்தைப் பரிசோதித்து சிகிச்சை தேவையா என்பதை அறிய கூடுதல் சோதனைகள் தேவைப்படலாம்.

ஆன்டிவைரல்கள் எனப்படும் மருந்துகள் ஹெபடைடிஸ் B கொண்ட பலருக்கு சிகிச்சையளிக்கும். இருந்தாலும், அனைவருக்கும் சிகிச்சை தேவைப்படுவதில்லை.

சில மருந்துகள் கல்லீரலைச் சேதப்படுத்தலாம் என்பதால் பரிந்துரைக்கப்பட்ட, ஓவர்-தி-கவுண்டர் மருந்துகள், சப்ளிமெண்ட்டுகள் அல்லது வைட்டமின்கள் எடுப்பதற்கு முன்பு ஒரு மருத்துவரிடம் கலந்தாலோசிக்கவும்.

ஹெபடைடிஸ் A தடுப்பூசி மூலமும் நீங்கள் பயன்பெறலாம். உங்கள் தொற்றைக் கண்காணிக்க பிரசவத்திற்குப் பிறகும் மருத்துவரைத் தொடர்ந்து பாருங்கள்.